# புதிய சபைகளை ஆரம்பியுங்கள்

**சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் C7b யை வாசிக்கவும்.**

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே! பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால், இல்லாத இடங்களில் விசுவாசிகளின் கூட்டத்தை உருவாக்கி, அதன் மூலம், சீஷர்களை உருவாக்கச் சொன்ன உமது கட்டளைக்கு எங்கள் சபை கீழ்ப்படியுமாறு உதவ வேண்டுகிறோம்."


## 1. புதிய சபைகளையும் குழுக்களையும் ஆரம்பிக்க தேவ வார்த்தையோடும் ஜெபத்தோடும் ஆயத்தம் ஆகுக.

ஒரு சபை என்பது இயேசுவைப் பின்பற்றுகிறவர்களின் ஒரு கூட்டமாகும்.

உண்மையான சீஷர்களாய் மாறுவதற்கு புதிய விசுவாசிகள் கடைபிடிக்க வேண்டியவை என்ன என்பதை நீங்கள் அறிந்து போதிக்க தேவையானவற்றை **மத்.28:18-20ல்** காண்க. *(பதில். அவர்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும். இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவர் கட்டளை இட்ட எல்லாம் எளிய வடிவத்தில் ஏழு அடிப்படையான கற்பனைகளில் அடங்கி உள்ளன. முதலில் இருந்தே ஆதி திருச்சபை இயேசுவின் எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்தது. இந்த வகையில் அப்போஸ்தலர்கள் சீஷர்களை உருவாக்கிய இடங்களில் எல்லாம் சபை பெருகியது).*

ஆதி புதிய ஏற்பாட்டு திருச்சபையில் விசுவாசிகள் எவ்வாறு இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தனர் என்பதை **அப்.2:37-47**)ல் காண்க.

- புதிய விசுவாசிகள் கீழ்ப்படிய வேண்டு-மென்று பேதுரு கூறிய முதல் இயேசுவின் கற்பனை எது? *(வச.38)*



- விசுவாசிகளாக எண்ணப்படுவதற்கு மனம் திரும்பிய பாவிகள் கீழ்ப்படிய வேண்டிய கற்பனை எது? *(வச.41)*
- இயேசு கட்டளையிட்டது போல புதிதாக ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டிய நான்கு காரியங்கள் யாவை? *(வச.42)*
- வசனம் 42ல் கூறப்பட்டுள்ள கிரியைகளில் (அப்போஸ்தலருடைய உபதேசம் கேட்டல், அந்நியோந்நியம், அப்பம் பிட்குதல், ஜெபித்தல்) விசுவாசிகள் ஒருவரில் ஒருவர் அன்பு கூர்ந்தார்கள் என்பதை எந்தக் காரியம் தெளிவாகக் காட்டுகிறது?
- அவர்களுடைய நேசம் மிகுந்த அந்நியோந்நியம் வேறு எந்த இயேசுவின் கற்பனைக்குள் அவர்களை வழிநடத்தியது *(வச.44-45)*.

**எபே.4:11-12 ல்**, எத்தகைய மக்களை உங்கள் மந்தைக்குக் கொடுப்பதாக தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார்?

இந்த ஐந்து வகையான மக்களில், பொதுவாக மற்றவர்களை சபை ஸ்தாபிப்பதற்காக வழிநடத்தும் இருவகை யார், யார்? *(பதில்: அப்போஸ்தலர்களும் சுவிசேஷகர்களும்)*

## புதிய சபைகளையும் குழுக்களையும் ஆரம்பிக்க வழிகாட்டுதல்கள்

**வழிகாட்டுதல்# 1:** அந்தந்தப் பகுதியில் உள்ள சூழலுக்கு ஏற்ற முறைகளை கையாளுக. (ஒரே முறையையே எப்போதும் பின்பற்ற வேண்டும் என்ற அவசியம் இல்லை). வரும் மூன்று வழிகளில் ஒன்றிலேயே மந்தைகள் ஆரம்பமாகின்றன. உங்கள் சூழலுக்கு ஏற்ற சிறந்த முறையைத் தெரிந்து கொள்ளவும்.

1. **நடுதல் (Planting):**தாய் மந்தையில் இருந்து, ஒரு சபை ஸ்தாபகரோ அல்லது ஒரு சபை நிறுவும் குழுவோ பிற பகுதிகளிலும் பிற கலாச்சார மக்கள் மத்தியிலும் சபைகளை ஆரம்பிப்பதற்காக அனுப்பப்படுவார்கள். இதை அப்.13:1-3ல் காணலாம்.
2. **பிறப்பித்தல்: (Birthing):** ஒரு தாய்சபையோ அதன் உறுப்பினர்களோ அருகில் இருக்கும் சமுதாயத்தில் சுவிசேஷம் கூறி, புதிய விசுவாசிகளை சீஷர்களாக்கி, அந்த சமுதாயத்தில் புதிய தலைவர்களை பயிற்றுவிப்பர்கள். யாரும் தாய் சபையை விட்டு பிரிந்து போக வேண்டியதில்லை. இதற்கு அப்.10 உதாரணம் தருகிறது.
3. **கட்டுதல்: (Hiving)** ஒரு சில எண்ணிக்கையான விசுவாசிகள் தங்கள் தாய் சபையை விட்டுப் பிரிந்து அருகில் ஒரு புதிய மந்தையின் மையக்கருவை உருவாக்குவார்கள். இது பெரிய நகரங்களில் உள்ள சபைகளுக்கு, போக்குவரத்து வசதிகள் இருப்பதால், ஒரே கலாச்சார குழுக்களிடையே பணிபுரிய சிறப்பாக இருக்கும்.

**வழிகாட்டுதல்# 2:** தொடர்புகள் உள்ள இடத்தில் பணியாற்றுதல். ஊழியர்கள், நண்பர்களும் குடும்பங்களும் இருக்கும் இடத்தில் சென்று புதிய மந்தைகளை உருவாக்குதல் பொதுவாக எளிமையானதாக இருக்கும்.

**வழிகாட்டுதல்# 3:** மக்கள் கூட்டத்தில் உள்ள மிகவும் இசைவான (Responsive) தொகுதியில் கவனம் செலுத்துதல் (Focus on the most responsive segment of the population). உங்களை வரவேற்காத பட்சத்தில் காலில் உள்ள தூசியை உதறிப் போடும்படி இயேசு கட்டளை இட்டதை நினைவு கூரவும். சில புதிய சபைகள் தோல்வியுற காரணம் மக்களுக்கு இருக்கும் வெவ்வேறு பின்னணிகளே. இது கருத்து வேறுபாடுகளை உருவாக்கும். சிறுசிறு மந்தைகளை கட்டுவதே சிறந்தது. ஏனெனில் பெரிய கூட்டங்களில் கலாச்சார வேறுபாடுகள் மோதல்களை உருவாக்குகின்றன. கலாத்தியாவில் இதுவே நடந்தது. (இது பற்றி நீங்கள் அறியவில்லை யானால் பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தைப் படியுங்கள்.)

**வழிகாட்டல்# 4:** வாரந்தோறும் ஆராதிப்பதற்காக விசுவாசிகள் கூட ஆரம்பித்த பிறகும் தொடர்ந்து சுவிசேஷம் அறிவியுங்கள். சில மந்தைகள் தோல்வியுறக் காரணம், மக்கள் கூடி வர ஆரம்பித்த உடன் ஊழியர்கள் தங்கள் வேலை முடிந்து விட்டது என்று எண்ணுவதே.

**வழிகாட்டல்# 5:** குழு சிறியதாக இருந்தாலும், ஆராதனையை சிறந்த முறையில் திட்டமிட்டு நடத்த வேண்டும். சோம்பேறித்தனமான ஊழியர்கள் ஆராதனையை அர்த்தமுள்ளதாக நடத்தாதனாலேயே சில புதிய மந்தைகள் இயங்கமுடியாமல் நின்று போய் விடுகின்றன.

**வழிகாட்டல்# 6:** ஒவ்வொரு ஊழியரின் பங்கையும் வரையறுக்க வேண்டும். என்ன செய்ய வேண்டும் என்பதை ஒவ்வொரு ஊழியரும் அறிந்திருக்க வேண்டும் என்பதை உறுதி செய்க. தங்களால் நல்ல முறையில் செய்ய முடிந்ததையே ஒவ்வொருவரும் செய்யட்டும். ஒரு ஊழியர் தன் மனைவி என்ன செய்ய வேண்டும் அல்லது செய்யக் கூடாது என்பதில் அவரோடு ஒத்துப்போக வேண்டும். சில மந்தைகள் தோல்வி அடையக் காரணம், அதன் ஊழியர்கள் அவர்களால் நன்றாக செய்ய முடியாததை செய்யும்படி பலவந்தப் படுத்தப்படுவதாலேயே ஆகும், அல்லது தாங்கள் ஒதுக்கப்படுகிறார்கள் என்று எண்ணுவதனால் ஆகும்.

2. **இந்த வாரத்தில் விசுவாசிகள் செய்ய வேண்டியவற்றை உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

அருகில் உள்ள புறக்கணிக்கப்பட்ட சமுதாயங்களில் புதிய சபைகளை நிறுவவும். ஒரு மந்தை செய்ய வேண்டும் என்று புதிய ஏற்பாடு விதிக்கும் எல்லாவற்றையும் விசுவாசிகள் செய்யும்போது ஒரு புதிய குழு சபையாக மாறுகிறது. இது இயேசுவின் கட்டளைகளையும், அதில் இருந்து பிறக்கும் எல்லா கற்பனைகளையும் உள்ளடக்கியது ஆகும்.

உங்கள் சபையோ அல்லது நீங்கள் ஆரம்பிக்கும் புதிய சபையோ இனிமேல் தான் வளர்க்க வேண்டும் என்ற நிலையில் உள்ள செயல்பாட்டை கீழ்க்கண்ட பட்டியலில் அடையாளப்படுத்தவும். என்ன செய்ய வேண்டும் என்பதை உடன் ஊழியர்களுடன் திட்டமிட்டு, பின் அதைச் செய்யவும்.

( ) இயேசுவுக்கு சாட்சியாய் இருத்தல். மனம் திரும்பிய பாவிகளின் விசுவாசத்தை உறுதிப்படுத்த ஞானஸ்நானம் அளித்தல்.

( ) புதிய சபையை ஆரம்பிக்கப் புறக்கணிக்கப் பட்ட மக்கள் மத்தியில் ஊழியர்களை அனுப்புதல்.

( ) கர்த்தரின் பந்தி உட்பட எல்லா செயல்பாடுகளிலும் முழுஇருதயத்தோடு பங்குபெற விசுவாசிகளுக்கு உதவுதல்.

( ) சபை அங்கத்தில் அன்பான அந்நியோந்நியத்தைக் கட்டுதல். திருமண உறவையும் குடும்ப வாழ்க்கையையும் பலப்படுத்துதல்.

( ) பிரச்சினைகள் உள்ள நபர்களும், குடும்பங்களும் மன்னிக்கவும் ஒப்புரவாகவும் உதவுதல்.

( ) பரிசுத்தத்தையும், அனுதின புதிதாகுதலையும், பரிசுத்த ஆவியானவர் தரும் மாற்றத்தையும் நாடும் படி மந்தைக்கு உதவுதல்.

( ) பிறருடைய தேவைகள் பூர்த்தியாகும்படி தாராளமாக கொடுத்தல்.

( ) ஜெபி, மன்றாடு, பிசாசுகளுக்கு எதிர்த்து ஆவிக்குரிய போரை நடத்து, குடும்பங்கள் தினமும் ஜெபிக்க உதவுதல்.

( ) மக்களுடைய வாழ்க்கையில் தேவ வார்த்தையை நடைமுறைப் படுத்துதல். தவறான கொள்கைகளை போதிக்கும் "ஓநாய்களை" விரட்டுதல்.

( ) புதிய கண்காணிக்கும் மூப்பர்களையும், சுவிசேஷ ஊழியர்களையும் புதிய சபைத் தலைவர்களையும் பயிற்று வித்தல்.

( ) விசுவாசிகள் தங்களுக்குத் தரப்பட்டுள்ள வெவ்வேறு ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்தி சேவை செய்யுமாறு ஒழுங்கு படுத்தி கண்காணித்தல்.

( ) இந்த செயல்பாடுகளை ஆற்றுமாறு அருகில் உள்ள சபைகளோடு ஒத்துழைத்து உதவி செய்தல்.

**3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் ஆலோசனை செய்க.**

**அப். 2:37-47**ல் இருந்து ஆதி புதிய ஏற்பாட்டு சபை உருவான **கதையைக் கூறி**, மேலே பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும்.

புதிய சபைகளை உருவாக்குவோரை வழிநடத்தும் மக்களை தேவன் உங்கள் சபைக்கு கொடுக்கிறார் என்பதை **எபே.4:11-12** ன் மூலம் விளக்குக. உதவி செய்வோரை தரும்படி தேவனை வேண்டிக் கொள்ளுங்கள்.

இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியும் சீஷர்களை உருவாக்கும் இயேசுவின் கட்டளையை **மத்.20:18-20** லிருந்து விளக்கவும். இயேசுவின் அடிப்படை கற்பனைகளை உங்கள் சபையோர் அனைவரும் அறிந்திருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துக.

புதிய சபைகளை **ஆரம்பிக்க உதவும் ஆறு வழிமுறைகளை** மேலே பட்டியல் இடப்பட்டபடி விளக்குக.

உங்கள் சபை வளர்க்க வேண்டிய **செயல்பாடுகள்** என்று நீங்கள் மேலே அடையாளம் இட்டுள்ளவைகளில் எதையாவது விவரித்து, அவற்றை வளர்க்க விசுவாசிகளுடன் திட்டம் இடுக. புதிய சபைகளை ஆரம்பிக்கும் ஊழியர்கள் தங்களது முன்னேற்றம் பற்றிய அறிக்கையைத் தருமாறு வேண்டிக் கொள்ளுங்கள்.

**சிறுவர்கள்** தாங்கள் தயாரித்ததை வழங்கட்டும்.

இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களாக** அமர்ந்து, ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும், புதிய சபைகளை ஆரம்பிக்கத் திட்டம் இடவும், புதிய ஏற்பாடு கூறும் சில செயல்பாடுகளை வளர்க்கவும் ஆலோசனைகள் செய்யவும்.

அந்தியோகியா சபை செய்தது போல (அப்.13:1-3) மந்தைகளை உருவாக்க ஊழியர்களை நியமிக்கவும்.

அப். 2:42-46 ஐ வாசித்துக் **கர்த்தரின் பந்தியை** ஆசரிக்கவும். புதிய சபைகள் ஆரம்பத்தில் இருந்தே கர்த்தரின் பந்தியை ஆசரிக்க வேண்டும் என்பதையும், அதை வீடுகளிலேயும் செய்யலாம் என்பதையும் விளக்கவும்.

எபே. 4:11-12 ஐ மனனம் செய்யவும்.

Copyright 2003 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net